Alcohol and Drug
Information Centre

ADIC

No.40/18, Park Road, Colombo 5, Sri Lanka.
Tel: +94 11 2584416, +94 11 2592515, Fax: +94 11 2508484
E-mail: info@adicsrilanka.org, adicc@sltnet.lk
Web Site: http://www.adicsrilanka.org

ஊடகச் செய்தி

உலக புகையிலை தடுப்புத் தினம் - 2021 மே 31

**“புகைப்பதை நிறுத்துவதற்காக அர்ப்பணிப்போம்” என்பது இவ்வருடத்திற்கான உலக புகைப்பொருள் தடுப்பு தினத்தின் தொனிப்பொருளாகும்.**

சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்தையொட்டி 28.05.2021 அன்று இணையவழி ஊடக மாநாடு மதுசாரம் மற்றும் பொதைப்பொருள் தகவல் நிலையத்தினால் நடாத்தப்பட்டது. இதில் திரு. புபுது சுமனசேகர – நிறைவேற்று பணிப்பாளர், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம், வைத்தியர். சஜீவ ரனவீர - இலங்கை மருத்துவ சங்கத்தின் மதுசாரம், புகைப்பொருள் மற்றும் சட்ட விரோத போதைப்பொருட்களின் விஷேட நிபுனக்குழுவின் அங்கத்தவர், வைத்தியர். ஜயமால் டி சில்வா - சிரேஷ்ட உள நல மருத்துவ ஆவோசகர், ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், வைத்தியர். மகேஸ் ராஜசூரிய - சிரேஷ்ட உள நல மருத்துவ ஆவோசகர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆகியோர் கலந்து கொண்டு கொவிட் தொற்றிற்கு புகைத்தல் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது, இக்கால கட்டத்தில் புகைத்தலில் இருந்து விடுதலையாக வேண்டியதன் முக்கியத்துவம், விகிதாசாரங்கள், விளம்பர நுணுக்கங்கள் போன்ற பல விடயங்களை கலந்துரையாடியமைக் குறிப்பிடத்தக்கது.

பாவனையாளர்களில் இருவரில் ஒருவரின் மரணத்திற்கு காரணியாக அமையும் அதேவேளை ஒரு நாளைக்கு சராசரியாக 55 இலங்கையர்கள் உட்பட வருடாந்தம் உலகளாவிய ரீதியில் 08 மில்லியன் மக்களை அகால மரணமாக்கும் புகைப்பொருள், இன்னமும் சட்டரீதியான உற்பத்திப்பொருளாகும்.

புகைப்பொருள் பாவனை என்பது, பாவனையாளர்களை மட்டுமின்றி, பாவனையாளர்களுடன் தொடர்பு வைத்துள்ளோர்களையும் நோயாளர்களாக்குவதற்கும், கொலை செய்வதற்கும் நேரடி காரணியாக அமைவதோடு, முழு மனித இனத்திற்கும் துக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பொருளாகும்.

இம்முறை உலக சுகாதார ஸ்தாபனம் முன்வைத்துள்ள புகைப்பொருள் தடுப்பு தினத்திற்கான தொனிப்பொருளாக அமைவது, “புகைப்பதை நிறுத்துவதற்காக அர்ப்பணிப்போம்” என்பதாகும். புகையிலை பாவனையானது, இருதய நோய், புற்று நோய், சுவாச நோய் மற்றும் நீரிழிவு ஆகிய தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக அமைகிறது. மேலும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இவ்வருட ஆரம்பத்தில் கணிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வுகளிற்கு ஏற்ப, புகை பிடிப்போருக்கு கொவிட் - 19 ஏற்படும் அபாயமும் மற்றும் மரணிக்கும் அபாயமும் அதிகம் என்பதை சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறிப்பாக புகைப்பவர்கள் அடிக்கடி உதடுகளின் மீது கைகளை வைப்பதனால் கொரோனா வைரஸ் உடலினுள் செல்வதற்கான சந்தர்ப்பம் அதிகம். புகைப்பிடிப்போர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதனால் அவர்களுக்கு கொவிட் தொற்றும் சந்தர்ப்பம் அதிகமாகும். மேலும் கொரோனா வைரஸ் அவர்களின் உடலிற்குள் செல்லுமிடத்து, நுரையீரலின் செயற்பாடு பலவீனமடைவதுடன், அவர்களுடைய நோய் நிலைமை தீவிரமடைந்து மரணம் சம்பவிப்பதற்கான அதிக சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

புகைப்பொருள் என்பது நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், குடும்பத்தின் மகிழ்ச்சி, மற்றும் ஒற்றுமை ஆகியவற்றிற்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான பொருளாகும். கடந்த 2016ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதியம் (UNDP) ஆகியன இணைந்து இலங்கையில் நடாத்திய கணக்கெடுப்பின் படி புகைத்தல் காரணமாக ஏற்பட்ட மரணங்கள், நோய்கள் மற்றும் வேறு தாக்கங்கங்களினால் இலங்கை பொருளாதாரத்திற்கு ரூபாய் 214 பில்லியன்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அதே ஆண்டில் புகையிலை நிறுவனத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற வரி வருமானம் ரூபாய் 92.9 பில்லியன் மாத்திரமே.

புகைப்பிடிப்போர்கள் தமது பாவனையை நிறுத்த வேண்டியதும், அந்நிலைமையை தக்க வைத்துக்கொள்ள வேண்டியதும் இக்காலத்தின் இன்றியமையாத ஒரு விடயமாகும். தன்னையும், தன்னுடைய அன்புக்குரியோர்களையும் இந்த அசம்பாவிதத்திலிருந்து காப்பாற்றுவதற்கு நிச்சயமாக உமது புகைப்பொருள் பாவனை நிறுத்தப்பட வேண்டும்.

நாடு என்ற ரீதியில் எமது நாடு கொவிட் தொற்றின் மிகவும் பயங்கரமான நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளதுடன், மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்களில் பல ஆண்டுகளாக கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் இன்னும் நடைமுறைப்படுத்தப்படாத, புகைப்பொருள் பாவனையைக் குறைக்கக்கூடிய கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் கொள்கைகளை உடனே நடைமுறைப்படுத்தி நாட்டையும், மக்களையும் பாதுகாப்பது பொறுப்பான அரசாங்கத்தின் பிரதான செயற்பாடாகும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வலியுருத்துகிறது.

01. தனி புகைப்பொருட்களின் விற்பனையைத் தடை செய்து பொதிகளில் மாத்திரம் விற்பனை செய்யப்படுதல்
02. கல்வி நிறுவனங்களிலிருந்து 100 மீற்றர்களுக்கு இடைப்பட்ட தூரத்தில் புகைப்பொருட்களின் விற்பனையைத் தடை செய்தல்.
03. சிகரட்டிற்காக வரையறுக்கப்பட்ட குறைந்த பட்ச விலையை தீர்மானிப்பதன் மூலம் குறைந்த விலையில் சிகரட் விற்பனை செய்தலை தடுத்தல்
04. வெற்றுப்பொதியிடல் முறைமையை அறிமுகப்படுத்தல்
05. பாடசாலை கட்டமைப்பிற்குள் புகையிலை நிறுவனங்கள் மேற்கொள்ளும் வியாபார நுணுக்கங்களை பிள்ளைகளுக்கு தெளிவுப்படுத்துவதற்கான முறையான (படிமுறை ரீதியான) வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்
06. இணைய வழியாகவும், ஏனைய ஊடகங்களின்வாயிலாகவும் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களை தடுக்கும் வகையில், கொள்கைகள் மீறப்படுமிடத்து தேவையான சட்டங்களை பயனுள்ள முறையில் அமுல்படுத்தல்

புகையிலை நிறுவனத்தின் பணபலம், தந்திரோபாயங்களை தோற்கடித்து, நாட்டின் இளைஞர்களையும் தற்போது புகைப்போர்களையும் பாதுகாக்க வேண்டியது இனம், மதம், கட்சி, நிறங்களையும் தாண்டி எம் அனைவரினதும் பொறுப்பகும்.

புபுது சுமனசேகர

நிறைவேற்றுப் பணிப்பாளர்